Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmil.com
RNI No. : TNTAMQ4840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் | சென்னை, 25 நவம்பர் 2026 | ரூ.2/- | இதழ் - 136

ஆர்யாவின் 'ஹலோ காதல்' டிசம்பர் 4-ல் வெளியீடு – டிரெய்லர் விழாவில் படக்குழுவினர் உற்சாகம்!



சென்னை – 25 நவம்பர், 2026 நடிகர் ஆர்யா நடிப்பில், இயக்குநர் நிகில் முரளி இயக்கியுள்ள 'ஹலோ காதல்' திரைப்படம் காதல், நகைச்சுவை மற்றும் அழகான உணர்வுகள் நிறைந்த ஃபீல் குட் திரைப்படமாக உருவாகியுள்ளது. இதில் ஆர்யாவுடன் நிகிலா விமல், வைஷ்ணவி சைதன்யா, சதீஷ், ஷாம், வினோதினி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைத்துள்ள இப்படம் டிசம்பர் 4-ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது.

இப்படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழா நவம்பர் 23-ஆம் தேதி நடைபெற்றது. இதில் இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ் குமார், நடிகர்கள் ஆர்யா, சதீஷ், ஷாம் உள்ளிட்ட படக்குழுவினர் கலந்து கொண்டனர்.

இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ் குமார் பேசுகையில், ஆர்யாவுடன் இணைந்து பல முக்கியப் படங்களில் பணியாற்றியுள்ளதாகவும், 'ராஜா ராணி' படத்தைப் போன்ற இனிமையான காதல் கதையாக 'ஹலோ காதல்' அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார். படத்தின் 'கண்ணும் கண்ணும்' பாடல் தனக்குப் பிடித்தமானது என்றும், ரசிகர்கள் திரையரங்குகளில் படத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நடிகர் கராத்தே கார்த்தி, தென்காசி பேச்சு வழக்கில் நடிக்க வாய்ப்பளித்த இயக்குநருக்கு நன்றி தெரிவித்தார். ஸ்டண்ட் சில்வா மற்றும் நடன இயக்குநர் ஷெரிஃப் ஆகியோருடன் பணியாற்றியது மகிழ்ச்சியளித்ததாகக் குறிப்பிட்டார். யுவராஜ் கணேஷ், ஆர்யாவுடன் இணைந்து நடித்தது தனது திரைப்பயணத்தில் மிகப்பெரிய அனுபவம் என்றார். சுனில் கார்த்திக், தனது முதல் மேடை அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டு படத்திற்கு ஆதரவு கேட்டார்.

விஜே பப்பு, சிறுவயதில் ஆர்யாவைப் பார்த்து ரசித்த நிலையில், தற்போது அவருடன் திரைப்படத்தில் நடித்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாகக் கூறினார். முத்தமிழ், ஆர்யாவின் நட்பும் அறிவுரைகளும் தனக்கு உதவியதாகவும், அவரது ஆலோசனையால் உடல் எடையைக் குறைத்ததாகவும் தெரிவித்தார். நடிகை வினோதினி, நீண்ட நாட்களுக்குப் பிறகு ஆர்யாவுடன் பணியாற்றுவது மகிழ்ச்சியளிப்பதாகக் கூறினார்.

கலை இயக்குநர் ஏ.ஆர். மோகன், காதல் கதைக்கு ஏற்ற அழகான அரங்குகள் மற்றும் இடங்களை உருவாக்கியுள்ளதாகத் தெரிவித்தார். சண்டை இயக்குநர் சில்வா, முழுக்க முழுக்க காதல் திரைப்படமாக இருந்தாலும் ஒரு சண்டைக் காட்சியில் பணியாற்ற வாய்ப்பளித்த இயக்குநருக்கு நன்றி கூறினார். ஆடை வடிவமைப்பாளர் நௌஷத் அகமது, ஆர்யாவுடன் தொடர்ந்து பணியாற்றி வருவது மகிழ்ச்சியளிப்பதாகக் குறிப்பிட்டார்.

படத்தொகுப்பாளர் பினு நெப்போலியன், இது தனது முதல் தமிழ்த் திரைப்படம் என்றும், கனவு நனவான தருணம் என்றும் தெரிவித்தார். நடன இயக்குநர் ஷெரிஃப், 'கண்ணும் கண்ணும்' உள்ளிட்ட மூன்று பாடல்களுக்கு நடன அமைப்பு செய்துள்ளதாகக் கூறினார். ஒளிப்பதிவாளர் ஜீவா சங்கர், இயக்குநர் நிகிலின் தெளிவான திரைக்கதையும் தயாரிப்பாளர்களின் ஒத்துழைப்பும் படத்திற்கு வலுசேர்த்துள்ளதாகத் தெரிவித்தார்.

நடிகர் சதீஷ், ஆர்யாவின் உதவும் குணத்தையும் நட்பையும் பாராட்டினார். மலேசியாவிலிருந்து வந்த தினேஷ் குமார், ஆர்யாவின் கடின உழைப்பையும் அர்ப்பணிப்பையும் பாராட்டினார். நடிகர் ஷாம், படத்தின் பாடல்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களின் பங்களிப்பைப் பாராட்டி, படம் மிகப்பெரிய வெற்றி பெற வாழ்த்தினார்.

நடிகை நிகிலா விமல், ஆர்யாவுடன் முதல்முறையாகப் பணியாற்றியது மகிழ்ச்சியளிப்பதாகவும், ஒளிப்பதிவாளர் ஜீவா சங்கர் தன்னை அழகாகக் காட்சிப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இயக்குநர் நிகில் முரளி, படத்தின் தொடக்கம் முதல் ஆதரவளித்த ஆர்யா, ஜி.வி. பிரகாஷ் உள்ளிட்ட அனைத்து கலைஞர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

இறுதியாகப் பேசிய நடிகர் ஆர்யா, நீண்ட நாட்களாக ஆக்ஷன் படங்களில் நடித்துவந்த நிலையில், சாயிஷாவின் விருப்பத்திற்கேற்ப ஒரு எளிமையான காதல் திரைப்படத்தில் நடிக்கத் தீர்மானித்ததாகக் கூறினார். மிகைப்படுத்தப்பட்ட உணர்ச்சிகள் இல்லாமல், இன்றைய பார்வையாளர்களின் வாழ்க்கையோடு ஒன்றிப்போகும் இயல்பான கதையாக இப்படம் அமைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

டிசம்பர் 4-ஆம் தேதி வெளியாகும் இப்படத்திற்கு பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்கள் முழு ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நடிகர்கள்: ஆர்யா, நிகிலா விமல், வைஷ்ணவி சைதன்யா, முரளி ஷர்மா, ஜெயபிரகாஷ், காளி வெங்கட், கருணாகரன், கராத்தே கார்த்தி, சதீஷ், வினோதினி, விஜே பப்பு மற்றும் முத்தமிழ்.

தொழில்நுட்பக் குழு: இயக்குநர் – நிகில் முரளி; கதை மற்றும் திரைக்கதை – சுனு ஏ.வி., ஜோதிஷ் எம்.; கூடுதல் திரைக்கதை மற்றும் தமிழ் வசனங்கள் – ஹலிதா ஷமீம்; இசை – ஜி.வி. பிரகாஷ் குமார்; பாடல்கள் – விவேக், கார்த்திக் நேதா, விஷ்ணு எடவன், நீரஜ் மாதவ்; ஒளிப்பதிவு – ஜீவா சங்கர்; படத்தொகுப்பு – பினு நெப்போலியன்; கலை இயக்கம் – ஏ.ஆர். மோகன்; நடனம் – எம். ஷெரிஃப்; சண்டைக் காட்சிகள் – ஸ்டன்ட் சில்வா; ஆடை வடிவமைப்பு – நௌஷாத் அகமது; ஒலி – எம்.ஆர். ராஜகிருஷ்ணன்; மக்கள் தொடர்பு – ரியாஸ் கே. அகமது, பாரஸ் ரியாஸ். தயாரிப்பாளர்கள் – சயேஷா சைகல், கிஷோர் டி. இப்படத்தை தி ஷோ பீப்பிள் மற்றும் சில்வர் கிரெய்ன் பிக்சர்ஸ் தயாரித்துள்ளன.